★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 29உ வெள்ளி (13—1—56) ★ ★ வெளியூர்: தை 1உ சனி (14—1—56) [இதழ் 1[illegible]

திட்ட மந்திரி கூட்டும் 'சாது'க்கள் மாநாடு!

பாட்னா, ஜன 11—

எல்லா மாநிலங்களிலும் உள்ள சாதுக்களின் பிரதிநிதிகள் மாநாடு ஒன்றில் கூட்டி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்வதில் எல்லா சாதுக்களின் உழைப்பையும் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கான முயற்சியை திட்ட மந்திரியான குல்ஜாரிலால் நந்தா மேற்கொண்டிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் மாநாடு நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

இந்தியாவில் மொத்தம் 25 இலட்சம் சாதுக்கள் இருக்கக்கூடும் என மதிப்பிடப்படுகிறதாம்.

இந்தி ஏகாதிபத்தியத்தின் உள்நோக்கத்தை அம்பலமாக்குகிறார் கெர்!

'இந்தியாவின் கலாச்சார ஒற்றுமை'க்கு இந்தி உறவு வேண்டுமாம்

வட்டார மொழிகள் பாதிக்கப்படாது என வழக்கமான பல்லவி

'வேறு எல்லா வடநாட்டுத் தலைவர்களையும் போலவேதான் ஆட்சி மொழி (இந்தி மொழி)க் குழுத் தலைவர், பி. ஜி. கெர் அவர்களும், 'இந்தி மொழி எவர்மீதும் திணிக்கப்படவில்லை,' என்று பேசியிருக்கிறார்.

இந்தி மொழியை எப்படிப் புகுத்துவது என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான அவர், இந்தி மொழி பற்றி அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள அம்சங்கள் மிக புத்திசாலித்தனமானவை என்றும், இந்தி மொழியை வேகமாக அபிவிருத்தி செய்யும்போதே அதனை, இந்தியப் பேரரசின் அலுவல் மொழியாகவும், தீவிரமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

வட்டார மொழிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது தானும்! ஆனால், அதே நேரத்தில், பல மொழி மக்களையும் நெருக்க ஒன்று சேர்க்கும்போது, தற்செயலாக ஏற்படக்கூடிய பிளவுகளை – பிரிவினை நோக்கங்களைப் பல மாநிலங்களிடையேயும், மத்திய சர்க்காரிலும் நடைபெற வேண்டிய காரியங்களுக்கு இந்தி மொழி இணைப்பைப் பயன்படுத்துவதின் மூலம் திருத்த வேண்டுமாம்! மேலும், இந்தி மொழி உறவின் மூலம், இந்தியாவின் கலாச்சார ஒற்றுமையையும் பிரகடனப்படுத்த முடியுமாம்.

இப்படியும் கூடத்தான், வடவரின் இந்தி மொழி ஆதிக்க உள்நோக்கத்தைத் தெளிவுபடுத்தும் வகையில், கெர் அவர்கள் கருத்துக்களைக் கக்கியிருக்கிறார்.

சென்னையில் நான்கு நாள் 'ஆராய்ச்சி'யை முடித்துக் கொண்ட பின்பு தனக்குத் தரப்பட்ட விருந்து ஒன்றில் பேசுகையில்தான் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சென்னை அதற்கு வழக்கமாக உரிய அறிவுக் கூர்மையாலும், அரசியல் சட்டம் பற்றி நுணுக்கமான உணர்விலும் இப்போதுள்ள அரசியல் சட்ட வரம்பிற்குட்பட்டே அலுவல் மொழிச் சிக்கலுக்கு தீர்வு காண வழிகாட்டியிருக்கிறது - சென்னை சர்க்கார் தந்த அறிக்கை மூலம் என்றும் அவர் பாராட்டினாராம்!

உலக வரலாற்றில் வேறெங்கும் இல்லாத அளவு, இந்தியாவின் அலுவல் மொழி விவகாரம் மிகச் சிக்கல் வாய்ந்ததுதான் என்றாலும், சிக்கலுக்கு முடிவு காண்பதென்பது இயலவே செய்யாத ஒன்றல்ல என்றும், தன் பணியைத் தானே புகழ்ந்து கொண்டார் அந்தத் தலைவர்!

அறிவிப்பு

திராவிடர் திருநாளை முன்னிட்டு 'நம் நாடு' அலுவலகத்திற்கு 14—1—56-ம் நாள் விடுமுறை. ஞாயிற்றுக்கிழமை வழக்கமான விடுமுறை எனவே, அடுத்த இதழ் 16—1—56 (வெளியூர் 17—1—56)-ம் நாளன்று வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— பொறுப்பாளர்.

அண்ணா, நெடுஞ்செழியன், சம்பத் ஆகியோருக்கு வரவேற்பு

வால்பாறை ஊராண்மைக் கழகத் தீர்மானம்

11-1-56-ம் நாள் 3 மணியளவில் வால்பாறை ஊராண்மைக் கழகத்தின் அவசரக் கூட்டம் தலைவர் ஜே. பி. ஜெயக்கினி அவர்கள் தலைமையில் கூடி, 15-1-56-ல் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகிய மூவரும் வால்பாறைக்கு வருகை தரும்போது அவர்களுக்கு ஊராண்மைக் கழகத்தின் சார்பில் வரவேற்பு அளிப்பதென துணைத் தலைவர் (அக்காமலை எஸ்டேட் தி. மு. கழக செயலாளர்) இராமசாமி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம், தோழர் பி. கே. சதுரகிரி அவர்களால் வழிமொழியப்பட்டு அதிகமான வாக்குகளால் தீர்மானிக்கப்பட்டது.

கிழக்கு வங்க அரசாங்கத்திற்கு தேசீய காங்கிரஸ் இறுதி எச்சரிக்கை

அரசியல் சட்டத்தில் இஸ்லாமிய அம்சங்கள் இடம் பெறுவதற்கு எதிர்ப்பு

டாக்கா, ஜன. 11—

பாகிஸ்தானுக்கு முழுவதும் ஜனநாயகமான ஒரு அரசியல் சட்டம் தயாரித்தாலன்றி, தனது கட்சி சார்பில் ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் இடம் பெற்றிருக்கும் மூன்று பேர்களையும் திரும்பப் பெற்றுக்கொள்வதாக, பாகிஸ்தான் தேசியக் காங்கிரஸ் இன்று தெரிவித்திருக்கிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள அரசியல் சட்டத்தில் காணப்படும் ஜனநாயகத்திற்கு விரோதமான— தேசிய விரோதமான இஸ்லாமிய அம்சங்களைத் தாங்கள் எதிர்ப்பதாக தேசியக் காங்கிரசின் செயற்குழுவினர் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

இஸ்லாமிய உள்ளடக்கமும், தோற்றமும் கொண்ட அத்தகு ஒரு அரசியல் சட்டம் தேசியக் காங்கிரசாராலும், ஜனநாயக சுதந்திர விரும்பிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்று காங்கிரஸ் கூறுகிறதாம்.

காங்கிரஸ் இந்த நேரத்தில் சர்க்காருக்குத் தந்திருக்கும் இறுதி எச்சரிக்கையில் காணப்படும் கோரிக்கைகளாவன:—

(1) பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள், பாதுகாப்புக் கைதிகள் ஆகியோரை 15 நாட்களுக்குள் விடுதலை செய்ய வேண்டும்; அல்லது, முதன் மந்திரி வாக்களித்தபடி அவர்களை எல்லாம் நீதிமன்ற விசாரணை ஒன்றிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(2) கிழக்கு வங்க பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

(3) நாட்டின் அரசியல் சட்டத்தை முழுவதும் ஜனநாயக அடிப்படை கொண்டதாகச் செய்வதற்கு, அரசியல் சட்ட உருவாக்கத்தில் காங்கிரஸ் கட்சி பங்கு பெறுவதற்கான எல்லாவகை ஆதரவுகளையும் தருவதாக உறுதிமொழி அளிக்கவேண்டும்.

இவையும், இன்னும் சில பிற கோரிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

வரிகொடா வேலைநிறுத்தம்

பௌஜாதே அச்சுறுத்தல்

பாரிஸ், ஜன. 12—

"தனது வரி விதிப்பு எதிர்ப்பு இயக்கத்தவர் தேசிய சட்ட சபைக்குள் நுழைவதை இதர அரசியல் கட்சியினர் தடை செய்வார்களானால், பிரான்ஸ் முழுவதும் வரி கொடா வேலை நிறுத்தம் செய்யப்படும்"

என்று, பௌஜாதே இயக்கத் தலைவரான பௌஜாதே பத்திரிகை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கிழமை இறுதியில் நடைபெறும் பௌஜாதே தேசிய காங்கிரசின்போது வகுக்கப்படும் ஒரு குறைந்தபட்சத் திட்டத்தை நிறைவேற்றுவதாக உறுதிமொழி தருவார்களானால் தன் கட்சியைச் சேர்ந்த 52 பேர்களும் அமையக் கூடிய சர்க்காருக்கு ஆதரவு தருவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால இறுதிக்குள்ளாக 5,600 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலட்சிய அளவு 4,000) இக்கிணறுகள் மூலம் 8 இலட்சம் ஏக்கரா நிலத்துக்கும் பாசன வசதி கிடைத்துவரும்.

அண்ணாதுரை

★

ஜனவரி 14, 15, 16 ஆகிய நாட்களில் கோவை மாவட்டத்தில் சி. என். அண்ணாதுரை கலந்துகொள்வதாக இருந்த கூட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டு விட்டன. தேதி பிறகு அறிவிக்கப்படும்.

வாழ்த்துக்கள்

திராவிடர் திருநாளான பொங்கல் திருவிழாவன்று 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள், கழகத் தோழர்கட்கு தங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

'மேதாவி'கள் என எண்ணாதீர்!

சர்க்கார் அதிகாரிகளுக்கு முன்ஷி புத்திமதி

"தங்களை மேதாவிகள் என்று கருதிக் கொள்ளும் பழங்கால எண்ணங் கொண்டவர்களாக இன்றைய சர்க்கார் அதிகாரிகள் இருக்கக் கூடாது; இந்த விஷயத்தில் வெள்ளைக்கார ஐ. சி. எஸ். அதிகாரிகளைப்போல நடந்து கொள்ளக் கூடாது"

என்று, திரு-கொச்சி சர்க்கார் அதிகாரிகள் கூட்டத்தில் பேசுகையில் உ. பி. கவர்னரான கே. எம். முன்ஷி குறிப்பிட்டிருக்கிறார்.

பொங்கல் வாழ்த்து!

திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் எம் உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரியவாக!

திராவிடர் அனைவரும் வளம் பல பெற்று, நலம் பல எய்தி, இனிய வாழ்வில் நெடிது நாள் இன்புற்றுத் திளைப்பார்களாக!

பொங்கற் புதுநாளில் இல்லந்தோறும் பொங்கும் இன்பம் என்றும் எங்கும் தங்கட்டும்!

இரா. நெடுஞ்செழியன்,

—பொதுச்செயலாளர் - தி. மு. கழகம்.

சென்னையில் திராவிடர் திருநாள்

14—1—56 சனி மாலை 6-மணிக்கு

சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்காவில்

நடைபெறும்

தலைவர்: **இளம்பரிதி**

பேசுவோர்:

நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன் சிற்றரசு, அப்பாதுரை முதலானோர்.

இன்னிசை: தோழியர் ஜி. கஸ்தூரி குழுவினர்

நாடகம்: தோழர் செழியன் எழுதிய 'சிலந்திக் கூடு'

விளையாட்டுப் போட்டிகள், அறிவித்தபடி பகலில் நடைபெறும்

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 13—1—'56 வெள்ளி

இன்பம் பொங்கட்டும்!

★

காடு மேடு திருத்தி, கல்லும் முள்ளும் நீக்கி, கழனி கண்டு, கலப்பை ஏர் கொண்டு அகல உழுவதிலும் ஆழ உழுது, வரம் பிட்ட உரம் இட்டு, பரம் படித்து மண்வளத்தைப் பண்படுத்தி, மணிவிதை தூவி, நீர் பாய்ச்சி, முளைவிடும் பயிருடன் முளைக்கும் களை பிடுங்கி, பிறையென வளரும் பயிரைக் கண்ணெனக் காத்து கனிகுலுங்கும் கதிர் அறுத்து, போரடித்து 'வைக்கோல்' நீக்கி புடைத்து பதர் நீக்கி, செந்நெற் குவியலைக் கூட்டும் உலகின் உயிர்நாடியாம் உழவர் பெருமக்களின் ஒப்பற்ற திருநாள் — உழைப்பின் உருபலன் காணும் அறுவடைப் பெருநாள்—பொங்கற் புதுநாள்.

நாளை, நாடு விழாக் கோலம் பூண்டிருக்கும்; வீடுகளிலே இன்பம் கோலோச்சும்; ஆடவரும் பெண்டிரும், அவர்தம் அமுதங்களாம் செல்வச் சிறுர்களும் மகிழ்ச்சியில் ஊறித் திளைத்திருப்பர்.

வீடுகளுக்கு வெள்ளையடித்து, வீதிகளில் கோலமிட்டு, புத்தாடை அணிந்து, புதுப்பானையில் பொங்கி வரும் பாலில் சுட்டிய புத்தரிசி கொட்டி, வெல்லமும் பருப்பும் பக்குவமாய்க் கூட்டி, ஆவின் நெய்யும் சேர்த்துப் படைத்த பொங்கலும், காயும் கனியும், செங்கரும்பும் உண்டு மகிழ்வர் —சுற்றமும், உற்றாரும் புடைசூழ!

உழைப்பவர் மகிழும் ஒரே நாள் பொங்கற் புதுநாள். உழைப்பின் உயர்வை உணரும் நாள். உழைப்பவர்க்கே உலகம் என்பதை உணரத் தூண்டும் நாள் - அறிவுடைப் பெருநாள் - திராவிடரின் தேசீயத் திருநாள்.

'உழைத்தேன், ஓயாது ஆண்டு முழுதும்; கண்ட பலன், ஆண்டு முழுதும் கண்ணீரும், கவலையும்தான் என்றும்—என் உழைப்பின் விளைவுகள் எனக்கே முழுவதும் இல்லைதான் என்றாலும், என் உழைப்பின் பலனுக்கு உருவம் இதோ! செந்நெற் குவியல்! செங்கரும்புத் தோட்டம்! இவை என் உழைப்பால் உருவானவை என்றெண்ணும்போது, எனக்கேற்படும் மகிழ்ச்சியின், இன்பத்தின் நினைவுதான்-நான் கொண்டாடும் பொங்கல்!— என்று உழவர் பெருமக்கள் கொண்டாடும் அவசியமான திருநாள். இந்த நாள், உழைப்பவரின் பெருமையை உணர்த்தும் நாள் என்பது மட்டுமல்ல; உழைப்பவரின் பண்பைப் பிரதிபலிக்கும் நன்னாளும்கூட; தன்னுடன் — தன்னைப்போல — தன்னலமின்றி உழைத்த மாடுகளையும், உழவர் பெருமக்கள் மறந்துவிடவில்லை என்பதைத்தானே மாட்டுப் பொங்கல் விழா கூறுகிறது! உலகின் உயிர் வளர்க்கும் உணவு தரும் உழவர்தம் உள்ளத்தின் நன்றியறிதல்தான் என்னே! திராவிடரின் தேசீயத் திருநாளாகவிருக்க, இந்த உத்தமத் திருநாளைவிட சிறந்த நாள் உண்டோ?

இந்தப் பொங்கற் புதுநாள் என்று திராவிடர் அனைவருக்கும் தி. மு. கழகம், அதன் ஏடான 'நம் நாடு' மூலம், வாழ்த்துக் கூறுகிறது. இருள் அகன்று ஒளி சூழட்டும்; துன்பம் விலகி இன்பம் பொங்கட்டும் - இல்லந்தோறும், உள்ளந்தோறும் என்று.

திராவிடர்கள் ஆண்டுக்கொரு நாள், பொங்கலன்று விழாவெடுக்கின்றனர்; இன்பம் கொண்டாடுகின்றனர். ஆனால்.......!

பொன்னும், மணியும் விளையும் பூமி – தாயகம் திராவிடம் இன்னும் வடநாட்டவரின் அடிமைக் காடாக, ஆதிக்கக் கோட்டையாக, சுரண்டல் கோட்டமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் திராவிடர் மறந்துவிடுவதற்கில்லை. வலுத்து உரம் பெற்றுவிட நினைக்கும் இந்தக் கொடுமைக்கு இலக்காகி வாழ்வு கருகிவரும் நிலையிலிருக்கும் திராவிடரை, இயற்கைக் கொடுமை வேறு கொட்டிவிட்டிருக்கிறது அண்மையில்.

வெட்டி முறிக்கப்பட்டன; வேரோடு சாய்ந்தன; கனி குலுங்கும் மரங்கள் மட்டுமல்ல - மனித உருவங்களும் கூடத்தான். சீரழிந்தவை — செப்பனிட முடியாதவை— வளம் கொழிக்கும் வயல்களும், வாவிகளும்; சாலைகளும் மட்டுமல்ல - 'சாகாது போனோமே' என்று தவிக்கும் மனிதர்களின் வாழ்வும்தான்.

தேம்பியழும் மக்களின் கண்ணீர், இன்னமும் முழுவதுமாக துடைக்கப்படவில்லை. அதற்கு நாம் ஆற்றவேண்டிய பணி இன்னும் ஏராளம் இருக்கிறது என்பதையும் மறந்துவிடவில்லை, நாம்.

இந்த நிலையிலும் விழா— பொங்கல் விழா கொண்டாடுகிறோம், ஆண்டிற்கொன்று தான் என்பதால்.

சாக்காட்டில் நின்று கொண்டு சிரிப்பவர் - சிரிக்க முடிபவரால்தானே, வாழ்க்கையையும், மக்களையும் உண்மையாக நேசிக்க முடியும்?

தெளிவில்லாத பல ஆசைகள் ஊற்றுக்காலாய் நின்று தோற்றுவிக்கும் இன்ப வெள்ளப் பெருக்கு உள்ளத்தில் நிறையப் பெற்றிருக்கும் திராவிடர்களின் முகங்களில் நாளை - பொங்கலன்று பொலிவு படர்ந்திருக்கும். ஆனால், நாளை மறுநாள் நிலை........? என்ற ஏக்கமும் சாயல் கொண்டிருக்கத்தான் செய்யும்.

நீலநிறக் கடலில் ஒய்யாரமாக ஆடி அசைந்து, நுரை கொழிக்கப் பொங்கிவரும் அலைபோல, இன்பம் பொங்கட்டும் திராவிடர்தம் உள்ளத்தில், இல்லத்தில் - என்று, நமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்!

58 புதிய நூற்பு ஆலைகள்

7 - இலட்சம் கதிர்களுடன் தென்னாட்டில் துவங்குமாம்

கோவை, ஜன. 11—

7 - இலட்சம் கதிர்களுடன் மேலும் 58 நூற்பு ஆலைகள், தமிழ் நாட்டில் அமைக்கப்படுமாம்

பழைய ஆலைகளில் தற்போதுள்ள கதிர்களை எடுத்துவிட்டு மேலும் 4 இலட்சம் கதிர்கள் பொருத்தப்படும்; ஆக மொத்தம் அடுத்த 2 ஆண்டில் மொத்தம் 11 இலட்சம் கதிர்கள் ஏற்படுத்தத் திட்டம் போடப்பட்டுள்ளதாம்.

இதனால் சென்னை மாநிலத்தில் மேலும் 17,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்குமாம்.

25,000 கதிர்கள் உள்ள நான்கு ஆலைகள் ஏற்கனவே முழு மூச்சுடன் உற்பத்தியில் இறங்கிவிட்டன. கோவை மாவட்டத்தில் மட்டும் மேலும் 16 ஆலைகள் ஏற்படுத்தும் வேலை துரிதமாக நடந்துகொண்டிருக்கிறது.

தமிழ் நாட்டிற்கு 11 இலட்சம் கதிர்களுக்கு 'லைசென்ஸ்' வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இக்கதிர்களை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தற்போது, தென்னாட்டில் மொத்தம் 29 இலட்சம் கதிர்கள் உள்ள 110 ஆலைகள் இருக்கின்றன; இவைகளில் 35 நூற்பு, நெசவு ஆலைகளாகும்.

சியாங் சர்க்கார் பாதுகாப்பில்

'காஷ்மீர் இளவரசி'யை வீழ்த்திய கயவன்

பிரிட்டன் தரும் தகவல்

லண்டன், ஜன. 11—

'காஷ்மீர் இளவரசி' என்ற விமானத்தில் வெடிகுண்டு வைத்து அதனை விபத்துக்குள்ளாக்கி 16 உயிர்களைக் கொன்று குவித்த குற்றம் புரிந்தவன் என்று கூறப்படும் ஒருவனை, பார்மோசாவிற்குள் பதுங்கிக்கிடக்கும் சியாங்கே-ஷேக்கின் சர்க்கார் பிரிட்டனிடம் ஒப்படைக்க மறுத்துவருகிறதாம்.

ஹாங்காங் விமான நிலயத்தில் வீழ்த்தப்பட்ட விமானம், கடந்த ஏப்ரல் திங்களில், பாண்டுங் மாநாட்டிற்கு போலந்து பத்திரிகையாளர்கள், மற்றும் செஞ்சீனப் பிரதிநிதிகளை ஏற்றிக்கொண்டு செல்கையில், இந்த மனிதன் வெடிகுண்டு வைத்து வீழ்த்தினான் என்று கூறப்படுகிறது.

சியாங்கின் கையாளான இவனுக்கு 50,000 பவுன் வரை இனாம் தரப்பட்டதாம்—இந்த இழிசெயலுக்காக! விமானத்தை வீழ்த்திய பின், இவன் சியாங் பதுங்கியிருக்கும் பார்மோசாவிற்குள் ஓடிப்போய் பதுங்கிக்கொண்டானாம்.

இவனைப் பிடித்துத்தர, சியாங் சர்க்கார் கண்டிப்பாக மறுக்கிறதாம்.

பிரிட்டிஷ் சர்க்காருக்கும்—தேசீய சீன சர்க்காருக்குமிடையே குற்றவாளிகளைப் பிடித்துத் தருவது பற்றிய ஒப்பந்தம் எதுவும் இல்லாததால், இதுபற்றி வற்புறுத்திக் கேட்க முடியவில்லையாம்.

பிரிட்டன் இந்த நிலைக்காக மிகவும் வருத்தப்படுவதாகத் தெரியவருகிறது.

இது குறித்து பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இந்திய சர்க்கார் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்காக 44 திட்டங்களை ஏற்படுத்தியுள்ளனர்; இவற்றில் 27 வெளிநாடுகளில் கல்வி பயில்வதற்கும், 17 உள்நாட்டிலேயே உயர்தரப் படிப்புக்கும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

இந்திய இரயில்வேக்கள், 1955 அக்டோபர் மாதத்தில் நாளொன்றுக்கு சராசரி 2,55,000 டன் வீதம் சரக்குகளை ஏற்றிச் சென்றன.

அகதிப் பெண்ணைத் தாக்கிய அதிகாரி

தலைமறைவாகி விட்டாராம்!

ஜலந்தர், ஜன. 12—

அகதிப் பெண் ஒருவரை, அகதி புனரமைப்பு இலாகா அதிகாரி ஒருவர் தாக்கிவிட்டு மறைந்துவிட்டதாயும், அவரைப் போலீசார் தேடுவதாயும் தெரியவருகிறது.

இந்த அதிகாரி, அந்த அகதிப் பெண் 'செக்' ஒன்றிற்குப் பணம் பெறுவதற்காக அலுவலகம் வந்தபோது, அவரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

அலுவலகத்தைச் சேர்ந்த வேறொரு அதிகாரியும் இதற்கு உடந்தையாயிருந்ததாயும், அவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

மறைந்துவிட்ட அதிகாரி 'பாஸ்போர்ட்' பெற்றிருப்பதாயும், அவர் நாட்டை விட்டே ஓடிவிடயத்தனிப்பதாயும் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில், சம்பவத்திற்குப் பிறகு நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டம் ஒன்றில் இது குறித்துப் பேசப்பட்டதுடன், இந்திய சர்க்கார் உடனடியாக விசாரணை நடத்தவேண்டும் என்றும் கோரப்பட்டதாம்.

போலீசார் தீவிரமாக அந்த அதிகாரியைத் தேடி அலைகிறார்களாம்!

திரு-தமிழக மக்களுக்கு கேரளத்தார் பாதுகாப்பு

'வெறும் கேலிக் கூத்தாகும்'

டி. எஸ். இராமசாமி எம். எல். ஏ., கருத்து

நாகர்கோவில்—

"கடந்த எட்டு ஆண்டுகளாக எவ்விதமான பாதுகாப்பும் இல்லாமல் புறக்கணிக்கப் பட்டுவந்த தமிழ்மக்கள், இப்போது மட்டும் பாதுகாப்பு கிடைப்பதை எவ்விதத்தில் விரும்ப முடியும்? மொழியின் அடிப்படையில் தங்கள் தாயகத்துடன் சேரத் துடிக்கும் தமிழ் மக்களை, வற்புறுத்துதலின் மீது கேரளத்துடனேயே இருக்கச் செய்ய முயற்சிப்பதை நியாயமென கருதுவதற்கு இடமில்லை. அவ்விதம் பாதுகாப்பு தந்து, தமிழ் மக்களைக் கேரளத்துடன் இணைக்கச் செய்வது எத்தனைநாளைக்குத் தான் வெற்றிபெறமுடியும்?

"இந்தியா முழுமையும் மொழி அடிப்படையில் பிரியும் நேரத்தில்—மொழிவழி மாநிலங்கள் அமையும் தருணத்தில், தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் மட்டும் மலையாளிகளின் ஆட்சியில் பாதுகாப்புடன் வாழ வேண்டுமா? என்னதான் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டாலும்கூட, அது எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கும்?"

என்று, டி எஸ் இராமசாமி எம். எல் ஏ, அவர்கள் கூறியுள்ளார்.

இந்தியாவில் 37 கோடி மக்களுக்கு 37 மருத்துவப் பள்ளிகள்!

உலகெங்கணுமுள்ள மருத்துவர் எண்ணிக்கை

உலக நாடுகளில் தற்போது ஒரு லட்சம் தகுதி பெற்ற மருத்துவர்கள் இருக்கின்றனராம்.

85 நாடுகளில் 595 மருத்துவப் பள்ளிகள் இருக்கிறதாம்.

ஆண்டுதோறும் 50,000 முதல் 60 000 பேர், 'மருத்துவப் பட்டம்' பெறுவதாகவும் தெரிகிறதாம்.

14 நாடுகளில், 1,000 பேருக்கு அல்லது அதற்கும் குறைந்த மக்கள் தொகைக்கு ஒரு டாக்டர் வீதம் இருப்பதாகவும், ஆனால் 22 நாடுகளில் 20,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகைக்குத்தான் ஒரு டாக்டர் வீதம் இருப்பதாகவும் தெரிய வருகிறதாம்.

உலக சுகாதார நிறுவனம் திரட்டியுள்ள தகவல்களிலிருந்து 9 நாடுகளில் 10 இலட்சம் மக்கள் தொகைக்கும் குறைவாக உள்ள பிரதேசங்களுக்கு ஒரு மருத்துவப் பள்ளி இருப்பதாகவும், 13 நாடுகளில் 90 இலட்சம் முதல் 1,70,000 வரை மக்கள் தொகையுள்ள பிரதேசங்களுக்கு ஒரு மருத்துவப் பள்ளி இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தியாவில் 37,23,23 000 மக்கள் தொகைக்கு 37 மருத்துவப் பள்ளிகள் இருப்பதாகவும், ஆண்டுதோறும் சுமார் 2,000 பேர் 'மருத்துவப் பட்டம்' பெறுவதாகவும். தெரிவிக்கப்படுகிறது.

எவ்விதக் காரணமும் தோன்றவில்லையாம்!

நீர்வளிக் குண்டு பரிசோதனையை நிறுத்தி வைப்பதற்கு, எவ்விதக் காரணமும் தனக்குத் தோன்றவில்லையென்று, அமெரிக்க அரசாங்க அமைச்சர் டல்லஸ் அறிவித்துள்ளார்.

கொள்ளையரிடமிருந்து பாதுகாத்து......

எலிகளுக்குப் பணத்தைப் பறிகொடுத்த பரிதாபம்

சின்னூர், ஜன. 10—

ரூ. 500 பெறுமான கரன்சி நோட்டுகளைக் கொள்ளையரிடமிருந்து காப்பாற்ற நினைத்த கிராமவாசி ஒருவர், அவற்றை எலிகளுக்கு இரையாகக் கொடுத்த பரிதாப சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

பண்டுருளி என்ற தனது கிராமத்தைக் கொள்ளையர்கள் தாக்கக் கூடும் என அஞ்சிய பாபு மகனுவாஜே என்ற கிராமவாசி ஒருவர் தன்னிடமிருந்த ரூபாய் நோட்டுகளைத் தானியம் இருந்த டப்பா ஒன்றிற்குள் போட்டு மூடிவைத்தார்.

ஆனால், மறுநாள் டப்பாவைத் திறந்து பார்த்தபோது, அந்த ரூபாய் நோட்டுகள் எலிகளால் கடிக்கப்பட்டு, சுக்குநூறாகக் கிழிக்கப்பட்டிருந்ததைத்தான் காண முடிந்ததாம்!

மாநில எல்லைத் தகராறு

காங்கிரசு மேலிடக்கொள்கை

புதுடில்லி, ஜன 12—

மாநிலங்களின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கு, மாவட்டங்களைத்தான் அடிப்படை அம்சமாகக்கொள்ள வேண்டும் என்ற பசல் அலிக் குழுவின் சிபாரிசுக்கு மாறாக; காங்கிரஸ் மேலிடம் வட்டங்களையே (தாலுகாக்களையே) அடிப்படையாகக்கொள்ளுவது என்ற கொள்கையுடையதாயிருப்பதாக நம்பக மாய்த் தெரியவருகிறது.

மேலும் ஒரு வட்டத்தில் உள்ள மக்களில் 70 சதவிகிதத்தினர், எந்த மாநிலத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனரோ அந்த மாநிலத்தில் அந்த வட்டத்தைச் சேர்ப்பது என்றும், மொழிவாரி மக்கள் தொகையைக் கணக்கிட சர்க்காரின் 'சென்ஸஸ்' அறிக்கையைப் பயன்படுத்திக்கொள்வது என்றும் காங்கிரஸ் மேலிடம் கருதுகிறதாம்.

ஆனால் இந்தக் கொள்கையை எல்லா சிக்கல்களுக்கும் அனுஷ்டிக்க முடியாதெனவும் கருதப்படுகிறதாம்.

சில எல்லைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு எல்லைக் குழு ஒன்று நியமிப்பது என்றும் காங்கிரஸ் மேலிடத்தவர் கருதுவதாயும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களின் உற்பத்தி சக்தி 1950—54-ம் ஆண்டுகாலத்தில் சுமார் 43 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதாம்.

'எப்பொழுதும், எவர்மீதும் இந்தியை திணிக்கக் கூடாது'

'இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு காலம் நிர்ணயிக்கக் கூடாது'

சென்னை சட்ட சபைத் தலைவரின் கருத்து

சென்னை, ஜன. 11—

"எப்பொழுதும், எவர் மீதும் இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணிக்கக்கூடாது. இந்தி மொழியின் பொது வளர்ச்சியானது, குறைந்த அளவில் அம்மொழி பற்றிய அறிவு பெற்றிருப்பவர்களும் அம்மொழியில் பெற்றுள்ள முன்னேற்றத்தைப் பொருத்ததே யாகும்."

"சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து, இந்தியைப் பரப்புவதால் கிடைத்துள்ள வெற்றியை நோக்குமிடத்து, ஆட்சி மொழியாக ஆங்கிலத்தின் இடத்தை இந்தி நிரப்ப 1965-ம் ஆண்டுக்குப் பிறகே நிறைவேறக்கூடும்; எனவே, இந்தி மொழியில் மக்கள் தேர்ச்சிப் பெறும் வரையில் ஆட்சி மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வரவேண்டும்."

"தமிழ் நாட்டில் இந்திக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கான காரணம், அரசியலும் உள்ளுணர்வுமாகும். ஆட்சி மொழியாக இந்தியைப் புகுத்துவதற்கு இறுதியான ஒருகாலத்தை நிர்ணயிக்கக் கூடாது. இந்தி பேசாத பகுதியினர் அம்மொழியில் தேர்ச்சியடையும் காலத்தையே, ஆட்சி மொழியாக இந்தி ஆக்கப்படும் காலமாகவும் கொள்ள வேண்டும்."

—இக்கருத்தை ஆட்சி மொழிக் குழுவினரிடம் சென்னை சட்ட சபைத் தலைவர் என். கோபால மேனன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"அகில இந்திய அரசாங்கப் பரீட்சைகள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் நடைபெற வேண்டும். அரசாங்கப் பரீட்சையில் பங்கு கொள்ளும் இந்தி பேசுபவர்களுக்கு தென்னிந்திய மொழிகள் கட்டாயமாக்கப்பட வேண்டும். அதேபோன்று இந்திபேசாதவர்களுக்கும் இந்தி கட்டாயமாக்கப்படவேண்டும்."

சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சி நடைபெறும்

சந்திரனின் சரியான [illegible] மிக மிக நுட்பமாய் ஆராய்வது 1957 ஜூலை முதல் 1958 டிசம்பர் முடிய நடைபெறுமாம்.

பல்லாயிரக்கணக்கான முறை பார்த்தறிதல் வேண்டியிருக்கும் என்றும், உலகமெங்கும் பல்லாயிரக்கணக்கான படங்கள் எடுக்க வேண்டியதாகும் என்றும் அதிகாரிகள் சொல்கிறார்கள். பூமி சுழலும் வேகத்தின் மாறுதல், பூமியின் அளவும் வடிவமும், ஒரேவித கோத்தை உறுதி செய்தல் ஆகியவை ஆராய்ச்சிப் பிரச்சினைகளாக இருக்குமாம்.

பங்கிங்காம்—கர்நாடிக் ஆலை

தி.மு.க.தோழர்களுக்கு

தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டிற்கு நமது தொழிலாளர்கள் நிதி தந்தும், 8-1-56 தேதி கூட்டம் சிறப்பாக நடைபெற உடனிருந்து ஒத்துழைத்தத் தோழர்களுக்கும் நன்றிதெரிவித்துக் கொள்கின்றேன். இதுவரை மாநில மாநாட்டிற்கு நிதி வசூல் செய்துள்ள தொகையை கொடுக்காத தோழர்கள் விரைவில் கொடுத்துவிட வேண்டுகின்றேன். அன்று அண்ணா அவர்கள் தெரிவித்தது போல், விரைவில் நாம் அந்தத் தொகையை தலைமை நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும; தோழர்கள் அனைவரும் 14-1-56-க்குள் கொடுக்க வேண்டுகின்றேன்,"

என, 24-வது வட்டத் தி மு. கழக செயலாளர் கோ. காசிநாதன் வேண்டிக்கொள்ளுகிறார்.

அமெரிக்க மக்களுக்கு எச்சரிக்கை தருகின்றனர்!

ஆசியாவிலும், மத்தியக் கிழக்கிலும் நிலைத்து நிற்பதற்கு ரஷ்யா முயற்சித்து வருகிறதென்றும், அம்முயற்சியைத் தடுப்பதற்குரிய அவசியத்தை அமெரிக்கா முழுதும் உணரவேண்டுமென்றும் அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவரும், டல்லசும் கூறியுள்ளனர்.

கைத்தறி அபிவிருத்தி

இந்தியப் பேரரசு தாராளமாக உதவுமாம்

பம்பாய், ஜன. 11—

கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு இந்தியப் பேரரசிடமிருந்து மாநில அரசாங்கங்களுக்கு தாராள நிதி உதவி கிடைக்கும் என்று, வர்த்தகத் தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி உறுதிமொழி தந்திருக்கிறாராம்.

கைத்தறித் தொழில் இந்தியாவின் எல்லா இடங்களிலும் அபிவிருத்தி அடைந்து வருவது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாயும், பல மாநில சர்க்கார்கள் மேற்கொண்ட திறமையான நடவடிக்கைகள்மூலம் பலன் கிடைத்திருப்பதாயும் டி. டி. கே. தெரிவித்திருக்கிறாராம்.

பலன் உண்டா?

புதுடில்லி, ஜன. 11—

இந்திய சர்க்கார், கதர் அபிவிருத்திக்காக, அகில இந்திய கா[illegible] கிராமக் கைத்தொழில்கள் போர்டுக்கு ரூ. 10,10,000-க்கும் அதிகமாக நிதி உதவி வழங்கியுள்ளனர்.

'அம்பர்சர்க்கா' நூற்புப் பயிற்சித் திட்டத்துக்குப் பின்னும் ரூ. 4,95,000 செலவிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை, 1,000 பயிற்சியாளர்களுக்கும், 500 தச்சர்களுக்கும் உதவித் தொகைகளும், [illegible] கட்டணங்களும் அளிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

சைப்ரஸ் விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க பிரிட்டிஷ் துருப்புகள்

லண்டன், ஜன. 11—

விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் சைப்ரஸ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக, விமானப் படைகள் உள்ளிட்ட ஏராளமான துருப்புகள் அனுப்பிவைக்கப்படும் என்று பிரிட்டிஷ் யுத்த இலாகா அறிவித்திருக்கிறது.

ஏற்கனவே, சைப்ரஸ் விடுதலைக் கிளர்ச்சிக்காரர்களை வேட்டையாடுவதற்காக 10,000 துருப்புகள் வரை பிரிட்டனிலிருந்து சென்றிருக்கின்றன

மத்தியக் கிழக்கில் பிரிட்டனுக்கு இருக்கிற ஒரே ஆதிக்கக் கோட்டை, இந்த சைப்ரஸ் மட்டும் தான்; சூயஸ் கால்வாய் பகுதியிலுள்ள தங்களுக்கிருந்த இராணுவத் தளங்களை எகிப்திடம் ஒப்படைத்துவிட பிரிட்டன் ஒப்புக்கொண்டதும், அங்கிருந்த துருப்புகள் எல்லாம் கூட சைப்ரசிற்குத்தான் அனுப்பி வைக்கப்பட்டன.

ஏராளமான துருப்புகளை இங்கிலாந்திலிருந்து பெற்றுக்கொண்டிருக்கும் சைப்ரஸ் கவர்னரான சர் ஜான் ஹார்டிங், விடுதலைக் கிளர்ச்சியின் தலைவரான மகாரியஸ் பாதிரியாரை மீண்டும் சந்தித்து, சைப்ரஸ் தீவில் அமைதி ஏற்படச் செய்வது பற்றி இரண்டு மணி நேரம் வரை விவாதித்திருக்கிறார்.

சைப்ரசின் அரசியல், அரசியல் சட்டம் பற்றிய எதிர்காலம் குறித்தும் இருவரும் விவாதித்தனர் என்றும், மீண்டும் சீக்கிரமே சந்தித்து தொடர்ந்து விவாதிப்பது என்று ஒப்புக்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்

3, 4, 5, 6

வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

நாட்களில் நடைபெறும்

— தி. மு. கழகத் தலைமை நிலையம்

நாடெங்கும் திராவிடர் திருநாள்

★

சென்னையில்

4-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 14—1—56 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் மு. இராமையா தலைமையில் நடைபெறும். தோழர் ம. பொ. வேதாசலம் கொடியேற்றி வைப்பார்; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

14—1—56 காலை 9 மணியளவில், 40-வது தி. மு. கழகச் சார்பில், எண் 4, லால்பேகம் தெரு, சேப்பாக்கத்தில், தோழியர் அலமேலு-அப்பாதுரை தலைமையில் விழா நடைபெறும். தோழர்கள் கா. அப்பாதுரையார், மா. மோகன் ம. செ. தா. மூர்த்தி, மா. வெ. இளங்கோ, மு. பொன்னுரங்கம், பி. கோ. கோவிந்தன், எம். கோ. மணி, புதுவை முகிலன் ஆகியோர் பேசுவர்.

14—1—56 காலை 9 மணியளவில் 41-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், ஏழைகளுக்குக் கஞ்சி வார்த்து, சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

14—1—56 காலை 9 மணிக்கு 41-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 1/2, காரணீசுவரர் கோவில் தெருவில் உள்ள கழகப் பணிமனையில், தோழர் இராதாகிருட்டிணன் தலைமையில் விழா கொண்டாடப்படும். தோழர் ஆர். அறிவழகன் கொடியேற்றுவார்; தோழர்கள் பி. எம். மதியழகன், கோ. இளவரசு பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்.

14—1—56 அன்று காலை 7 மணிக்கு 50-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், கழகக் கட்டிடத்தில், விழா கொண்டாடப்படும். தோழர் திருநாதன் இசையும், பொங்கல் வழங்குதலும் உண்டு.

13—1—56 இரவு 9 மணியளவில், நாடகப் பேராசிரியர் ப. சம்பந்தனார் கூத்து, இயல் கழகத்தின் சார்பில், 12-வது வட்டத் தி. மு. கழகத்தில் தோழர்கள் வி. முனுசாமி, எஸ். இராமகிருஷ்ணன், ஆர். தட்சிணாமூர்த்தி ஆகியோர் இன்னிசை வழங்குவர்.

15—1—56ல், குஞ்சா சௌந்திர பாண்டியனார் நினைவு படிப்பகத்தில், தோழர் சேதுராசன் தலைமையில் விழா நடைபெறும். தோழர் ச. செல்லபாண்டியன் கொடியேற்றிவைப்பார். தோழர்கள் பலர் பேசுவர். பகல் 1 மணிக்கு, மக்களுக்கு உணவளித்தலும், மாலை 4 - மணிக்கு, சிறுவர்களுக்கு இனிப்பு வழங்குதலும், இரவு 7 - மணியளவில் தோழர்கள் மு மணி மல்லையா குழுவினரின் இன்னிசையும் நடைபெறும். தோழர் ச. செல்லபாண்டியன் அவர்களால் சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இத்திருவிழா நிகழ்ச்சிகளையொட்டி படிப்பகச் சார்பில், 'நம் நாடு' இதழுக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

சென்னை 8-வது வட்டம் மக்கள் மன்றச் சார்பில், 14—1—56 காலை 9 மணிக்கு, 2,000 ஏழைகளுக்கு தோழர் சி எஸ். கணேசன் தலைமையில் உணவு வழங்கப்படும்.

14—1—56ல், சென்னை பூங்கா நகர், ஏலாகந்தப்பன் தெரு, எண். 33-ல் உள்ள அறிவியக்க மன்றத்தின் சார்பில் விழாக் கொண்டாடப்படும் காலை 9 மணிக்கு மேற்படி தெருவில், தோழர் கே. எம். மணி தலைமையில் தோழர்கள் ஆறுக்மாங்கதன், ஆண்டவன், மூக்சிரவேலு பேசுவர்; சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும்.

14—1—56 காலை 8 மணிக்கு, க. கணேசன் தலைமையில், வடசென்னை குறள் நெறிக் கழக

★

சீராமபுரம்—பெங்களூர்

14—1—56 காலை 8 மணிக்கு வ. உ. சி திடலில், தி. மு. கழகச் சார்பில் விழா கொண்டாடப்படும். தோழர் எஸ். வி. பதி கொடியேற்று விழா நடத்திவைப்பார். மாலை 6½ மணிக்கு, தோழர் வே இளஞ்சேரன் தலைமையில் பகுத்தறிவு நாடக மன்றத்தாரால் 'புரட்சிப் பாடகன்' நாடகம் நடைபெறும்

15—1—56 ஞாயிறு காலை 9 மணியிலிருந்து பலவித பந்தயங்கள் நடைபெறும். மாலை 5 மணிக்கு வ. உ. சி. திடலில் தோழர்கள் மு. வீரப்பன் தலைமையில், செழியன், முகவை ஆர். எஸ் பாண்டியன் சொற்பொழிவாற்றுவர்.

சொக்குப்பிள்ளைபட்டி

15—1—56ல், மாலை 5 மணிக்கு பெரியார் திடலில், தி. மு. கழகக் தோழர் பொன் ராமு தலைமையில், தோழர்கள் 'முகதா', எம். ஆர் செல்லம் பேசுவர்.

பொள்ளாச்சி

15—1—55 காலை, ஒட்டல் முன்னேற்றக் கழகச் சார்பில், நகரின் பல பகுதிகளில் கொடியேற்று விழாவும், மாலை 3 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளித்தலும், 5 மணிக்கு விளையாட்டு இசைப் போட்டிகளும், இரவு 8 மணிக்குப் பொதுக் கூட்டமும் நடைபெறும். அதுபோது தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், அ. ச. பாலு, எம். ஜி. சிரீதரன் அலி ஆகியோர் பேசுவர்.

வகுரம்பட்டி

15—1—56 இரவு 7½ மணிக்கு, நாமக்கல் வட்ட வகுரம்பட்டி தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழா நடைபெறும். தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுவார். இரவு 10 மணிக்கு தோழர் எஸ். எஸ். தென்னரசு எழுதிய 'அத்தான்' நாடகம் நடைபெறும்.

பெங்களூர்

15—1—56 காலை 9½ மணிக்கு பாரதிதாசன் படிப்பகச் சார்பில், பாரதிதாசன் இரவுப் பள்ளியில் தோழர் எஸ். வி. பதி தலைமையில், தோழர்கள் ஏ. டி. பிரான்சிஸ், ஜே. கனகசுந்தரம், சி. உலகநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கவுந்தப்பாடி

15—1—56 இரவு 9 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், கவுண்டம்பாளையம் முத்தமிழ் நாடக மன்றத்தாரால், பெரியார் திடலிலுள்ள ஆர். கே. அரங்கில் 'சூழ்ச்சி' எனும் நாடகம் நடைபெறும்.

(59, மன்னார்சாமி கோயில் வீதி, இராயபுரம்) அறையில் விழா நடைபெறும்.

14—1—56 சனிக்கிழமை காலை 8 மணிக்கு 4-வது வட்ட இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் முதல் ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் கொடியேற்றிவைப்பார்; தோழர்கள் கே ஏ மதியழகன், மு பெருமாள், கோ. வெற்றிவீரன், பி. எம். இராமையா, ஆகியோர் திராவிடர் திருநாள் என்பது பற்றி பேசுவர். பகல் 12 மணிக்கு 500-க்கு மேற்பட்டவர்களுக்கு கஞ்சி வார்க்கப்படும். இரவு 8½ மணிக்கு தோழர் கே. அர்ச்சுனன் தலைமையில் இன்னிசை நடைபெறும்.

15—1—56 மாலை 6 மணிக்கு, திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் சார்பில், தோழர் அ. பொ. அரசு தலைமையில் விழா நடைபெறும். தோழர்கள் எம் கே. மணி, மா பா. சாரதி, வெல்லைக் கபிலன், தோழியர் சற்குணம் சொற்பொழிவாற்றுவர்.

குள்ளம்பட்டி

15—1—56ல், விழா நிகழ்ச்சிகள் காலை 8 மணியிலிருந்து தொடர்ந்து இரவு 10 மணி வரை நடைபெறும்.

காலை 10 மணிக்கு அழகிரி பாசறையில்; தோழர் ந. முனியப்பன் தலைமையில், தோழர் பி. எம். குட்புசாமி அழகிரி படத்தையும், தோழர் ஈ வரதராசன் அண்ணா படத்தையும் திறந்துவைப்பார். மாலை 3 மணிக்கு சடு குடு, சிலம்ப வரிசைப் பந்தயங்கள் நடைபெறும். மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுள் திறமையானவர்களுக்குப் பரிசும், அரசிராமணி கிராமத்தைச் சேர்ந்த இரண்டு வயதுக்குட்பட்ட ஆரோக்கியமான குழந்தை ஒன்றுக்குப் பரிசும் கொடுக்கப்படும்.

சலகண்டபுரம்—சேலம்

15—1—56 மாலை 6 மணிக்கு திரு. வி. க. திடலில் (மாரியம்மன் கோயில் மைதானம்) தோழர் எஸ் இராமநாதன் தலைமையில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும தோழர்கள் க. அன்பழகன், ப. கண்ணன், கு. பெ. சீனிவாசன் ஆகியோர் விரிவுரையாற்றுவர்.

சத்திரப்பட்டி

15—1—56 இரவு 7 மணிக்கு நடுத் தெருவில், தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. மகாலிங்கம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெறும். தோழியர் சத்தியவாணி முத்து பேசுவார்

முத்துச்சாமிபுரம்

16—1—56ல், விழா நடைபெறும். தோழியர் சத்தியவாணி முத்து பேசுவார்.

விழுப்புரம்

16—1—56 மாலை 6 மணிக்கு மந்தகரை மைதானத்தில், தி. மு. கழகச் சார்பில் விழாப் பொதுக் கூட்டம் தோழர் எம். சண்முகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ப. உ. சண்முகம் பேசுவர்.

வேலூர்—வேலப்பாடி

16—1—56 மாலை, தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சுற்றுளி சுப்பிரமணியம், ஏ. எல். சி கிருஷ்ணசாமி, வே. அ. இளஞ்செழியன், வே. சு. பாண்டியன் பேசுவர். மாலை 2 மணிக்கு ஊர்வலமும், 5 மணிக்கு இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

கரூர்

16—1—56 மாலை 6 மணிக்கு கரூர் ஈஸ்வரன் கோவிலுக்கு வடபுறமுள்ள மைதானத்தில், தி. மு. கழகச் சார்பில், தோழர் என். ஆர். இராமசாமி தலைமையில், விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். இரத்தினம் எம்எல் ஏ., நாவரசன் சொற்பொழிவாற்றுவர். மாலை 5 மணிக்கு தோழர் இரா. வைரப்பெருமான் தலைமையில், இசை நிகழ்ச்சி நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு மேல் நகரின் பல இடங்களில் தோழர் ஆசைத்தம்பி அவர்களால் கொடியேற்று விழா நடைபெறும்.

கீழ்வழித்துணையாங்குப்பம்

17—1—56 மாலை 6 மணிக்கு, சர்தை வெளியில் தி. மு. கழகச் சார்பில் இரா. வீரராகவன் தலைமையில், விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் பேசுவர்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜன 28 : ஆயிக்குடி
25 : ஓமலூர்
26 : கொல்லங்கோடு திருமணம்
28 : பள்ளிப்பாளையம்
29 : சிதம்பரம் பொதுக் குழு
30 : பாப்பாரப்பட்டி

சண்முக கான சபா அளிக்கும்

ராஜா அண்ணாமலை மன்றத்தில்

14—1—56 சனி மாலை 6 மணிக்கு

★

எம். ஜி. இராமச்சந்திரன்

மற்றும் எம். ஜி ஆர். நாடக மன்றத்தினர் நடிக்கும்

'இன்பக் கனவு'

நாடகம் நடைபெறும்

கட்டணம் : ரூ. 5, 3, 2, 1

கழகக் கூட்டம்

கோரேகான் — பம்பாய்:

தி. மு. கழகத் துவக்க விழா

16—1—56 மாலை 6 மணிக்கு

கவர்ன்மெண்ட் காலனி

தலைவர் :

ஏ. வி. இராமன்

பேசுபவர் :

கண்ணதாசன்

சண்முகம்

★

திருவாடுதுறை :

தி. மு. கழகத் துவக்க விழா

15—1—56 மாலை 6 மணிக்கு

துவக்குபவர்:

இரே. இரத்தினபாலகுரு

தோழர்கள்: டி. ஏ. இராமசாமி, கோ. சி. மணி, என். எஸ். வாசன், கே. சோமு ஆகியோர் பேசுவர்

★

நல்லூர்கந்தம்பாளையம்:

தி. மு. கழகத் திறப்பு விழா

15-1-56 காலை 10 மணிக்கு நல்லூர் கந்தம்பாளையத்தில், தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெறும. காலை 9-30 மணிக்கு தோழர் ஏ. ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் நடைபெறும், 10 மணிக்கு இயக்கக் கொடியை, தோழர் குட்டி(ஏ)ராமசாமி ஏற்றி வைப்பார். 11 மணிக்கு தோழர் எம். பி. சுப்ரமணியம், எம்.எல்.ஏ. கழகத்தைத் திறந்துவைப்பார்.

மாலை 4-30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு முன்பாக தோழர் வி. காளியண்ணன் தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எம். பி. சுப்ரமணியம், எம். எல்.ஏ., டி. பி. மூர்த்தி, என். கே. பி. வேல், டி. எஸ். தங்கவேல் சொற்பொழிவாற்றுவர்.

★

கொலாபா — பம்பாய்

தி. மு. க. 3-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

17—1—56 இரவு 8 மணிக்கு மியூசியத்திற்குப் பின்புறம், லயன் கேட்டிற்கு எதிரிலுள்ள காமா ஹாலில் தோழர் எஸ். கே. ராஜு தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. எஸ். அன்பரசு கொடியேற்றுவார்; கே.கே. ராமநாதன் அண்ணா படத்தைத் திறந்து வைப்பார்.

தோழர்கள் : கண்ணதாசன், எஸ். தியாகராசன் சொற்பொழிவாற்றுவர்.

நூல்நிலையத் திறப்பு விழா

14—1—56 காலை 10 மணிக்கு, சென்னை இராயபுரம் கல்மண்டபம் வீதி, முத்தமிழ் கலை மன்றச் சார்பில், தோழர் க. கணேசன் தலைமையில், தோழர் வி. சுந்தரமூர்த்தி திறப்பு விழாவாற்றுவார்.

திருமணம்

தோழர் ப துளசிதாஸ்—தோழியர் வி. முத்து அம்மை வாழ்க்கை ஒப்பந்தம், சென்னை புளியந்தோப்பு, சிவராஜபுரம் 3-வது தெரு, 115 - எண். இல்லத்தில், 14—1—56 சனி காலை 9 மணி அளவில் நடைபெறும்.

தலைவர் :— ஏ. எஸ். வேணு

பேசுபவர் :— சி. பி சிற்றரசு

இன்னிசை :— (மாலை) — எம். டி. துளசிதாஸ் (குழுவினர்)

'முத்தமிழ் விழா'

16—1—56 அன்று கோவையில், மாலை 5 மணிக்கு, தோழர் சி. பி. பொன்னுசாமி தலைமையில், 'முத்தமிழ் விழா' நடைபெறும். இயல் பகுதி—இசைப் பகுதி—ஆகியவை நடைபெறும். தோழர்கள் பலர் கலந்துகொள்வர்.

பொங்கல் விழாவில்!

15—1—56 அன்று திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பக பொங்கல் விழாக் கூட்டத்திலும், 18—1—56ல், மைலாப்பூர் திருவள்ளுவர் இளைஞர் கழகத்தின் சார்பில் நடைபெறும் பொங்கல் விழா கூட்டத்திலும், 22—1—56 அன்று நுங்கம்பாக்கம் அழகிரி நூல் நிலையம் நடத்தும் திராவிடர் திருநாள் விழாக் கூட்டத்திலும் தோழியர் பொ. சற்குணம் (தி. மு. கழக மாணவி) கலந்துகொண்டு சொற்பொழிவாற்றும்.

கொடி ஏற்று விழா

14—1—56 காலை 8 மணிக்கு, சென்னை 8-வது வட்டம் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் என். வி. நடராசன் அவர்கள் இயக்கக் கொடியை ஏற்றிவைப்பார்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜன. 14 : சென்னை
15 : சேலம்
17 : கடலூர்
20 : பேரணமல்லூர்
21 : சென்னை—பெத்து நாய்க்கன்பேட்டை
22 : உடுமலைப்பேட்டை
26 : சென்னை 19-வது வட்டம்
28, 29 சிதம்பரம்

'ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்குப் பதிலாக பிளவையே பாக்தாத் ஒப்பந்தம் அரபு நாடுகள், மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் உண்டுபண்ணும்' என்று மார்ஷல் டிட்டோ கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ